மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.2 சசிக்குமார்

25.06.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

குறுக்கு விசாரணை :– நீங்கள் சொன்ன நிறுவனத்தில் வேலை பார்த்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகளின் சொத்துக்களின் சர்வே எண்கள், அமைப்பு பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீங்கள் எப்பொழுது வேலைக்கு சேர்ந்தீர்கள் என்றால், 2020 ஆண்டு ஜனவரி மாதம் வேலைக்கு சேர்ந்தேன். தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு பற்றிய விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மின் இணைப்பு உள்ளதா என்பது தெரியுமா என்றால் தெரியாது. எவ்வாறு தண்ணீர் இறைக்கிறார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் வேலை பார்க்கும் இடத்திற்கும் தாவா சொத்துக்கும் இடையில் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் ஒரு வேலி மட்டும் இடையில் உள்ளது. உங்களால் தாவா சொத்து யார் யாருக்கு எந்தெந்த பகுதியில் பாத்தியப்பட்டது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. தெரியும். நில வாய்க்கால் அழிக்கப்பட்ட விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நில வாய்க்காலின் நீள, அகலம் குறித்து உங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணில் இருந்த நில வாய்க்கால் அழிக்கப்பட்டது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். உங்களுக்கு வாதியை எப்போதிருந்து தெரியும் என்றால் 2020ம் ஆண்டு வேலைக்கு வந்தபிறகு தெரியும். முதல் விசாரணை சொன்ன விபரங்கள் வாதி சொல்லித்தான் தெரியும் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிக்கிடையே பிரச்சனை நடந்ததாக சொல்லும் நேரம், நாள் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. சுமார் எப்போது சம்பவம் நடந்தது என்றால் 2020ம் வருடம் ஏப்ரல் மாதம் நடந்திருக்கும். நீங்கள் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், வாதி கேட்டதன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பற்றியும் அதற்குண்டான ஆவணங்கள் பற்றியும் உங்களுக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல.

Dictated by me in open court and typed
by the Typist and read over to the
witness in Tamil and acknowledged by
him/her to be correct.

R KARTHIKEYAN Digitally signed by R KARTHIKEYAN
Date: 2024.06.25 17:39:27 +0530

District Munsif,
Palani.